மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவை கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

192—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***12044— திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வால்பாறை தொகுதி அமைந்திருக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 6 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 20 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், வால்பாறை தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம்.*

அச்சம் என்பது மடமையடா,
அஞ்சாமை திராவிடர் உடமையடா,
ஆறிலும் சாவு நூறிலும் சாவு,
எங்கள் தாயகம் மட்டுமல்ல,

2023 ஏப்ரல் 20]

எங்கள் கழகம் காப்பதும் கடமையெனக் கூறி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றரை கோடி தொண்டர்களை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் (மணியடிக்கப்பெற்றது) எங்கள் இயக்கத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளரும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அமுல் கந்தசாமி. (குறுக்கீடு) இல்லை, இது கேள்வி நேரம். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் debate–ல் பேசுங்கள், மற்ற இடங்களில் பேசுங்கள், இது live ஆக சென்றுகொண்டிருக்கிறது. பார்த்துக்கொண்டிருப்பவர்கள் உங்களை என்ன சொல்வார்கள்? கேள்வி கேட்கவேண்டுமென்றால் கேளுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா ஆகிய இருவரையும் வணங்கி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். கேள்விக்கு வாருங்கள் தம்பி. கேள்வி நேரத்தை வீணாக்காதீர்கள். இது மக்களுக்குள்ள பிரச்சினைகளையெல்லாம் பேசக்கூடிய நேரம் தம்பி. பேசுங்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *எனது வால்பாறை தொகுதி, வால்பாறை நகரம், கேரள மாநில எல்லை வரை நீண்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 28 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மலைப் பகுதிகளிலிருந்து, 100 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளன. வால்பாறையில் வசிக்கும் மக்கள், ஏழை தேயிலைத் தோட்ட தினக்கூலிகள். அவர்கள் அனைவரும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள். அவர்களின் பிள்ளைகள் விடுதிகளில் தங்கிப்படிக்க வசதியில்லாதவர்கள். வால்பாறையில் இருந்து கல்லூரிக்குச் சென்றுவர சுமார் 3 மணி நேரம் பயணிக்க வேண்டியிருக்கும். ஆகவே, தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு மாற்றுத் தொழில் அமைத்துக்கொடுக்க, வால்பாறை மலைப் பகுதியில், ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அவசியமாகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைப் பகுதியில் ஒரு பலவகை*

தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கலங்குறிச்சி என்ற இடத்தில் KMG Polytechnic கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்த Polytechnic கல்லூரியில் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 420. சேர்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை 82தான். இதுபோன்றதொரு சூழ்நிலையில் அங்கே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது என்பது சாதாரணமான விஷயம் அல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதி, வால்பாறை நகர மலைப் பகுதியில் உள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரியில் அறிவியல் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவுகள், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் பாடங்களை ஆய்வக வசதியுடன் அமைத்துக் கொடுக்க வேண்டும். மேலும், அங்கு படிக்கும் மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியில் 2006 ஆம் ஆண்டுதான், தலைவர் கலைஞர் அவர்களிடம், அப்போது இருந்த உறுப்பினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், ஓர் அரசு கலைக் கல்லூரி உருவாக்கப்பட்டது. அங்கேயும், இந்த மாதிரி நிறைய இடங்கள் காலியாக இருக்கின்றன. இருந்தாலும் உங்களுடைய

2023 ஏப்ரல் 20]

கோரிக்கை நியாயமானதுதான். Polytechnic–ல் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். 2010–2011–ல் நான்தான் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்தேன். அப்போது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 1,16,687 பேர் தமிழ்நாட்டில் மொத்தம் Polytechnic–ல் சேர்ந்திருந்தார்கள். ஆனால், அது பத்து ஆண்டுகளில், 2020–2021–ல் 59,350 ஆக குறைந்துள்ளது. அதை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழக முதலமைச்சர் அவர்கள், 'நான் முதல்வன்' என்ற திட்டத்தையும், 'புதுமைப் பெண்' திட்டத்தையும் அறிவித்ததன் விளைவாக இப்போது மீண்டும் அது, இந்த இரண்டு வருடங்களில் மட்டும் 12,090 உயர்ந்திருக்கிறது. ஆகவே, தமிழக முதலமைச்சர் எடுக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக, 4.0 தரத்திற்கு தொழில் துறையினுடைய தரத்திற்கேற்ப Polytechnic கல்லூரிகளை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, தொழிற்சாலைகளோடு அவர்கள் சேர்ந்து செயல்படவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் அடிப்படையில் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், 44 கோடி ரூபாய் செலவாகிறது. ஆகவே, நிதிநிலையையும் பொறுத்து, அங்கே மாணவர்கள் மற்ற கல்லூரிகளில் சேருகின்ற எண்ணிக்கையையும் பொறுத்து, உங்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் மாண்புமிகு முதல்வரிடம் சொல்லி, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***13870—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?